இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ரூ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொடுவாய்ப்பகுதி: " ரூ 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-00
" அரைக்கலம் ரூ. 4-50
" காற்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவஞு ஐப்பசிமீ ௨0௳ (1928 தவப்பர் 5) திங்கட்கிழமை. { இலக்கம்—௩௬.

(1889)

உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருணிநா னுணர்ச்சி யேகச்
செம்பூத்த நிகமாக மக்க ளேற்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளன்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த வொளகத்தந் தினிது நாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலைஞரேது
மறம்பூத்தவிநாயகன்றன் வலங்கொள்வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லரமா ரமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, சுமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, கீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெண்ணிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் சீரிழிவு, கீர்க்கடுப்பு, கீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தநாமாலை, பித்தபாண்டு, பீனிசம், வைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறைகில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவதான ஆரோக்கியகுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ற்,
மட்டக்களப்பு,
இலங்கை.

(M. 30.)

அறிவித்தல்.

இத்தாற்சகலருமறியவேண்டியது தற்காலம் கண்டியில் வசிக்கும் காசிப்பிள்ளை கந்தவனம் ஆகிய நான் எனது பெண்சாதி புலோலி மேற்கு க. க கந்தையா மகள் சிவகாமிப்பிள்ளையுடைய சம்மதத்துடன் நான்கள் இருபேரும் இப்போ பிரிகாட்களாய்ப் பிரிந்திருப்பதனுலும் எனது பெண்சாதிக்கும் பிள்ளைக்கும் காணக்கூடிய செலவு நான்கொடுத்து வருகிறபடியாலும் இனிமேல் எனது பெண்சாதியை நினைத்துக்கொடுக்கும் எந்தக்கடனுக்காவது நான் பாத்திரவாளியாகமாட்டேன் என்றதை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு.
கி. க கா. கந்தவனம்.
கண்டி,
1—11—28

(Mis 1323)

மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதனைவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலானதருக்க முடிவு.

—57 பக்கங்களையுடையது, விலைதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினேத்தரம். —விலைதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) கி. க. இராஜையன், மணல் தறை ஒழுக்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) ச. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

யாழ்ப்பாணம் ஸக்கியலாபநிதி.

1918 ஆண்டுஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்.
மூலநிதி 8 லட்சம் ரூபா
இதுவரையிற் கொடுபட்ட லாபப்பணம் ரூபா 1,22,810.
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான லிசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுவோர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் வீதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகப்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சீலை முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக் கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்)

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

மு. தாமோதரம்பிள்ளை
மனேஜர்.

(Y 65.)

யாழ்ப்பாணம் கிரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனியின் கிரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகன் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நான் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில மூர்த்திக்கலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கிரிமலைத் தலத்திற் பழைய கினறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமன் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைகடந்து வருகின்றது ஷை கினற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு மேல்படலில் வெள்ளாலும் பன்னீர்மரமும் கிழக்கு நமலைச்சாரலில் வெலிக்கப்பெறுமானுர்க்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதகுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரிகளின் தாமே அர்ச்சித்தற்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே ஷை மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினுல் அடியார்கள் இச்சிவபுண்ணியதலத்தில் வந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
வலவெட்டித்துறை.

(Q. 113.)

சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
நாம்புவலி
கில்வாய்வு
துடைப்பிடிப்பு
வாதம்
கழுக்கு
தொண்டைகோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்

உடன் சுகந்தரும்.

43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

மிருகங்கொழுப்புச் சோதனை.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

2—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 51.)

விசேஷ இனும்.

உயர்ந்த மிலிடரி காக்கி ட்ஸில் ஷோர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோளிலே ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8 மூன்று வாங்கினுல் 1 பட்டு மப்லர் இனும் 6 வாங்கினுல் ஒரு சம்மளிப் போர்வை இனும்.

புதிய மாதிரி! விலைசரகம்!

16 முழம் இஞ்சிட்டேஷன் சரிக்கி.

தோட்டி காசிப்பூசேலை!!

இனும்! இனும்!! இனும்!!!

இம்மாதிரியான அசல் ரொட்டிப்பூபோட்ட சேலை ரூபா 160, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

எனதுடைய 22 கார்ட் ரோல்ட்கோல்ட் கவுட்சர்லாந்தில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த நிறமான 10 வருட உத்தரவாதமுள்ள ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் வாட்சாகும். வாங்குபவர்களுக்கு ஷை சம்பிரதாய சேலை இனுமாக அனுப்பப்படும். சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு

லைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான். தனியாகவாங்கினுல் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில 6 புடவை வாங்கினுல் ஒருபுடவை இனும் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O,
Madras.

(Q. 112)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஷு
ஐப்பசிமீ உக திங்கட்டிமை

இங்குள்ள பொலிஸாரின் அலட்சியம்.

யாழ்ப்பாணத்தில் இப்போழுதுள்ள பொலிஸ்பகுதியார் சிறிது அலட்சியமாக விருக்கின்றார்களெனனுங் கருத்தப்பட, கொழும்பிற் பிரசுரமாகும் "டேலிலிநியூஸ்" என்னும் பத்திரிகையில் ஒருவிஷயம் வெளிவந்திருக்கின்றது. அதனை கொழி பெயர்த்து இப்பத்திரிகையிற் பிழிதோரிடத்து வெளியிட்டுள்ளோம். ஊரின் சமாதானமும் கொலை களவு முதலிய அக்கிரமங்களில்லாமையும் பொலிசாரிலேயே பெரும் பான்மையுந் தங்கியிருக்கின்றன. எந்த இடத்திற் பொலிசார் மிக்க அவதானமாகவும் கடமையிற்றிறம்பாமலும் லஞ்சம் முதலியவற்றிற்கு இடங்கொடாமலும் முன்மன் பாராமலும் நீதியை அநுசரித்தும் நடந்து கொள்ளுகின்றார்களோ அந்த இடத்திலே சமாதானமும் பொலிசார்மீது ஊரவர்களுக்கு நம்பிக்கையும் அதிகமுண்டாம். சில இரண்டொரு மாசத்துள் யாழ்ப்பாணத்திற் பயங்கரமான கொலைகள் நடக்துவிட்டனவென்பதை எவரும் அறிவர்; இன்றைக்குஞ் சந்தேகத்தோடுகூடிய தாகிய வட்டுக்கோட்டைக் கொலையின் உண்மையைப் பொலிசரும் இரகசியப் பொலிசரும் கண்டுபிடிப்பார்களென்ற நம்பிக்கை இங்குள்ள சனங்களிடத்திற் பெரிதுங் குடிகொண்டிருந்தது. ஆனால் இந்த நம்பிக்கை காலஞ்செல்லச்செல்லப் பொய்யாய்ப் பழங்கதைபாய்க் கனவாய் மெல்லத் தேய்ந்துபோகத் தொடங்கிவிட்டது. ஊரவர்களுடைய உதவியின்றிப் பொலிசர் குற்றங்களைக் கண்டுபிடித்தல் இலகுவல்லவென்பது உண்மையே. ஆனாற் பொலிசர் ஊரவர்பட்கு ஆபத்திற்கு உதவி, அவர்களிடத்து நம்பிக்கை பாராட்டி நடந்தால், ஊரவர்களும் பொலிசரிடத்து விசுவாசங்காட்டி இப்படிப்பட்ட கொலைக்குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயங்களிற் பொலிசருக்குத் துணைபுரிவர். பொலிசருக்குச் சனங்கள் பயந்தாலும் சனங்களுக்குப் பொலிசர் வெருண்டாலும் எவ்வகையான கமுமஞ் செவ்வனே நடைபெறாட்டா. ஆதலால் ஊரவர்கட்கும் பொலிசருக்குமிடையே பரஸ்பரம் விசுவாசமிருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப்பட்டினத்திற்கு அணித்தாகப் பொலிஸ்தானத்திலிருந்து கால்மைல் தூரத்துள் இருமுறை சண்டை நடப்ப, பொறுப்பானவர்கள் பொலிசருக்கு அதனைத் தெரிவிக்க முதல் முறை பொலிஸ் அதிகாரிகள் ஆளில்லையென்றதும், இரண்டாம்முறை காலதாமதஞ் செய்து வந்தகம் உண்மையானால், இங்குள்ள பொலிசர் தங்கள் கடமையைப் பெரிதும் அலட்சியஞ் செய்கின்றார்களென்றே சொல்ல வேண்டும். வடமராணமை போன்ற ஒரு பெரியமராணத்தில் யாழ்ப்பாணம் போன்ற பெரியபட்டணத்தில் பொலிஸ் பகுதித்தலைமை உத்தியோகம் வகித்திருப்போர் தக்க அநுபவமும் அதிகாரமும் ஆற்றலும் படைத்தவராயிருப்பதன்றி உத்தியோகமுறையறிவுவோர் இருத்தல் முடியாத காரியம். நட முதலிய பொலிஸ் தலைமை உத்தியோகத்தர் செயற்கருஞ் செயல்களைச் செய்தலுட சனங்களாற பாராட்டப்படல்வேண்டும் இந்த யாழ்ப்பாணத்திலேயேயாம்.

இற்றைக்குச் சிலவருடங்கட்கு முன்னர் கப்ரின் கோட்லி இங்கே பொலிஸ் தலைவராக விருந்தபோது, ஊரில் எவ்வகையான குற்றம் நேர்தலும் அவற்றைக் கண்டுபிடித்துவிடுதல்வேண்டுமென்னும் நோக்கப்பூண்டவராயிருந்தார். ஊரவர்களின் முறைப்பாட்டைத் தாம் நேரிற் சென்று விசாரணை செய்து உண்மையை யறியும் நோக்க முடையவராயு மிருந்தார். சிற்சில சமயங்களில் அவர் இப்பத்திரிகாலயத்திற்கு வந்து விஷயங்களை நேரில் அறிந்துபோவதுமுண்டு. பொலிஸ்பகுதித் தலைவர் அதிகமாக ஊரிற் சுற்றித் திரிவதினால் ஊரவர்களும் களவு முதலிய குற்றங்களைச் செய்யப் பயப்படுவர்; பொலிசரும் தங்கள் கடமையைச் சாவதானமாகச் செய்கார். பொலிசரிடத்திற் பழிவாங்குங் குணம் ஒருபோதும் இருக்கவேண்டாது. நேரிலோனை முலமாகச் சமாசாரத்தைத் தெரிவிக்கக்கூடிய இக்காலத்திலே, யாதாயினும் சண்டை பட்டின எல்லையுள் நடக்குமானால் உடனே அந்த இடத்திற் சமுமமாயிருப்பதன்றோ பொலிசருக்கு அழகாகும். அங்கிலிருந்து அனுப்ப ஆளில்லையென்றால் முறையாகாது. ஊரவர்களுடைய பணத்தில் ஒரு பெரும் தொகையும்போது சத்தமியாயே நிற்கும் என்பது பெற்றாம். என்றால், உயிர் நாளுக நின்றறிதலில்லை அசத்திநடு அசத்தாய் நின்றும், சத்தோடு சத்தாய் நின்றும், அறியும். அதாவது எக்தக்காலத்து எதனை யறியுமோ அதனோடு அதுவாய் நின்று அறியுக் தன்மை உயிருக்கு உடையது. இதுதான் "சார்க்கதன்வண்ணமாக்தன்மை" எனப்படும். இத்தன்மையையே இச்சூத்திரம் "இருநிறனறிவுளது.....ஆன்மா" என்று உணர்த்தும். ஈண்டு "இருநிறனறிவுளது" என்னும் வாக்கியம், இருநிறனாக ளாகிய சத்து, அசத்து இரண்டுகளுணர்வு நின்றறியும் அறிவையுடையது என்னும் பொருளை ஏழாம் வேற்றுமைத் தொகையாக நின்று தந்தது.

ஆறும்பாடம்—உயிர் சத்துமன்று அசத்துமன்று.

அசத்துப் பொருள்கள் யாவும் சடமென்றாம். உயிர் சித்தாதலின் அசத்தாக மாட்டாது இனி, உயிர் சத்தாகுமா வென்பதை ஆராய்வாம்.

உயிரும் அறிவுப்பொருள் சத்தும் அறிவுப்பொருள். என்றாலும் உயிரும் சத்தேயென்ன இடமில்லை இவ்விரண்டறிவுகளும் வெவ்வேறே: அன்றியும் சத்தென்றால் அறிவென்பதன்று. சத்தென்பது என்றும் ஒரு தன்மைத்தா யிருக்கும் பொருள். சிவத்தினறிவு என்றும் ஒரு தன்மைத்தாயுள்ளது. அவ்வறிவுக்குக் கூடுதல் குறைதலும விளங்குதல் மறைதலும், இல்லை உயிரின் அறிவு அவ்வாறன்று. ஒரு காலத்து அறியாமலே கிடக்கும், மற்றொருகாலத்து மறக்து மறக்து அறியும் இனியொரு காலத்துச் சத்தினுதவியால் ஒருதன்மையாகவறியும். ஆதலால் உயிர் சத்தாவதின்று. அசத்தாவதின்றென்றுணர்க்கண்டாம்

எனவே, உயிர் சத்துமன்று அசத்துமன்று என முடியும். இதுபற்றியே இச்சூத்திரம் "இரண்டலா ஆன்மா" என்றுணர்த்தும்.

என்றாலும் உயிர் ஒரு காலத்து அறியாது கிடத்தலால் அதனை ஒருவாறு அசத்து என்றும், மற்றொருகாலத்து உயிர், அறியுக்தன்மை பெறுதலால், ஒருவாறு சத்தென்றும் சொல்லலாம். இதனால் உயிர் சதசத்து என்று சொல்லப்படும்.

சூத்திரப் பொருட் சங்கிரகம்.

1. சிவம் அசத்தினை அறியாது.
2. அசத்துப்பொருள்கள் ஒன்றனையும் அறியா.
3. உயிர் சத்து அசத்துக்களாகிய இரண்டனையும் அறியும்.
4. உயிர் சத்து அசத்துக்களின் உதவியால் அறியும்.
5. உயிர் சத்தின்பால் நின்றும் அசத்தின்பால் நின்றும் அறியும்.
6. உயிர் சத்துமன்று அசத்துமன்று

காலம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்களாலும், பொருளியல்பு கூறி, பின் நிறுத்த முறைமையினால், ஏழாஞ் சூத்திரம் தொடங்கி மூன்று சூத்திரங்களினால் சாதனங்களின் இயல்பு கூறுவாராயினார் ஆசிரியர் பெருமான்.

மேற் கூறப்பட்ட மூன்று பொருள்களாகிய, பதி, பசு, பாசம் என்பனவற்றுள் சாதித்துப் பெறுதற்குரிய நிதுவென, பரிசேட அளவையினால் துணிந்துணர்தற்கு எழுந்தது இவ்வேழாஞ் சூத்திரமாகும்.

பரிசேட அளவையென்பது—ஒரு பொருளை, கியாயங்காட்டி இதுவல்ல இதுவல்ல வென்று நீக்கி, கியாயங் கொண்டு தள்ள முடியாது எஞ்சி நிற்கும் பொருளை இதுதான் என்று துணியும் அளவையாகும்.

வியஞ்சகம்—உடனின்று இன்றியமையாது உணர்த்தும் பொருள்.

ஏழாம் சூத்திரம் முற்றிற்று.

(தொடரும்.)

காலநிலை.

மழை வெளிக்கவில்லை; இதுவரையில் கெல் விதையாத கமக்காரர் இனிமேல் விதைத்தல் முடியாதெனக்கண்டு கை விட்டு மனத்துயரத்தோடு இருக்கின்றனர். விதைக்கப்படாத வயல்களுக்கும் விதைத்தவிடத்து முளை வெள்ளத்தால் அழுகிப் பழுதடைந்த வயல்களுக்கும் வன்னிப்பகுதியில் காற்று வாங்கி மோட்டர் லொறி மூலமாகவும் புகையிரத மூலமாகவும் இங்கே கொண்டுவந்து கட்டாலேவென்று சில கமக்காரர் யோசிக்கின்றனர். சின்னமுத்து, பொக்கணப்பன், எனப்படும் சின்னம்மை முதலாகத் தொற்று நோய்களும் வயிற்றோட்டமும் இக்கு அதிகமாகப் பரவியிருக்கின்றன.

கேணியில் விழ்ந்திறந்தமை.

புங்குடுதீவை ஜனனஸ்தானமாகவுடையவரும் இப்பொழுது சிலகாலமாக வண்ணார்பண்ணையிலுள்ள தட்டாரதெருவில் வசித்தவருமாகிய முருகர் வீரகத்தி என்பவர், கனகுகத்திலுள்ள யினர் கோவிற் கேணியில் சென்ற வியாழக்கிழமை குளிக்கச் சென்றவிடத்தில் கால்தவறித் தண்ணீருக்குள் அமிழ்ந்தி இறந்துபோயினர். அவருடையபிரேதம் அடுத்தநாள் கண்டெடுக்கப்பட்டது.

ஒருவாலிபன் புகையிரதத்தில் இறந்தமை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற புகையிரதம் சென்ற வியாழக்கிழமை காலை கொழும்பை யடையமுன் அதில் கொழும்புக்குச் சென்ற சாலமன் பேர்னாண்டோ என்னும் 18 வயதுடைய சிங்கள வாலிபனொருவன் அதற்குள் இறந்துபோயினன். இவன் யாழ்ப்பாணத்திலுள்ள யந்திரசாலை ஒன்றில் வேலைசெய்து வந்தனன். சில நாட்களுக்குமுன் அவன் கோய்வாய்ப்பட்டமையினால் அவனது தந்தை அவனைக் கொழும்புக்குப் அழைத்துச் சென்றனன். அச்சமையத்திலேயே அவன் மரணம் அடைந்தான்.

நாய்க்குக் கல்லால் எறிந்தமை.

மாத்தளைப் பொலிஸ்கோட்டில் ஏறக்குறைய 8 வயசுடைய சிறுவனொருவன் தெருவீதி ஓரத்திற் படுத்திருந்த நாய்க்குக் கல்லாலெறிந்தனெனக் குற்றஞ் சாட்டப்பட்டான். மாத்தளையிலுள்ள பொலிஸ்நீதிவான் மிஸ்டர் E H R. ரெனிசன் அவர்கள் மோட்டாதத்தில் சென்றுகொண்டிருக்கும்பொழுது ஷி சிறுவன் நாய்க்குக் கல்லாலெறிவதைக் கண்ணுற்று, மோட்டாதத்தினின்றும் இறங்கி நாய்க்குக் கல்லால் எறிந்த காரணம் யாதெனச் சிறுவன் ஓட்டம் பிடித்தனன். அவனைத் தூரக்து பிடித்துக் கோட்டுக்குக் கொணர்ந்தனர். அச்சிறுவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும் ஐந்து அடி அடிக்கும்படி விதிக்கப்பட்டது.

கணவனை நஞ்சூட்டிக் கொன்ற மனைவிக்கு மரணதண்டனை.

சில மாசங்கட்கு முன்னர் தல்பே என்னுமிடத்திலுள்ள லூயிசா மற்றில்டா என்னும்பெண் ரெப்பேட் டி சில்வா கனுனரத்தின என்பவருடைய உதவியோடு தனது கணவன் சார்ல்ஸ் சில்வா சமராசாய என்பவரை நஞ்சூட்டிக் கொன்றாளெனக் குற்றஞ் சாட்டப்பட்டவதற்குச் சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பு நிறியினல் விசாரணைச் சுப்பிரீம் கோட்டில் விளங்கப்பட்டது நஞ்சூட்டுதற்கு உதவியாயிருந்த கனுனரத்தின என்பவரும் ஷி பெண்ணும் எதிரிகளாயிருந்தனர். இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றனர்.

தேகவியோகம்.

அளவெட்டி, கிராமசங்க அங்கத்தவருளொருவரும் பிரசித்த தமிழ் 'நோத்தாரிகம்' மதுவிலக்கின் போருட்டு மிக்க அபிமானத்தோடு உழைத்து வந்தவருமாகிய ஸ்ரீ தம்பர் சபாபதிப்பிள்ளை யவர்கள் தமக்கு நேர்ந்த சுகவீனங் காரணமாக, சென்ற அக்டோபர் மாதம் 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யிரவு 8 மணி வரையில் தமது கிருகத்திற்றானே தேகவியோகமாயினரென்னுந் துக்கசெய்தியையறியலானேம். இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்த நாள் சுற்றமித்திரர் அயலவராகிய பல ஜனசமூகத்திற் சிறப்பாக நடைபெற்றன. மதுவிலக்கு விஷயமாகவும் மதுப்பதுரியாரின் துறைகளைக் கடிந்து சரியாய் நடக்கச் செய்யும் நோக்கமாகவும் இவர் பெரிதும் உழைத்தவர். தமது ஊர் சமயம் என்னுமிவைகளின் பொருட்டு இவரைப்போல் உண்மையபிமானத்தோடு உழைத்தவர் சிலரினுஞ் சிலரெனலாம். பொதுநன்மையான கருமங்களைச் செய்யும்போது இவர் சிற்சில சமயங்களிற் தம் சொந்த முயற்சியையும் பொருட்படுத்தாது முனைபாராது, தம் சொந்தப்பொருளைச் செலவிடுச் சிரமம் பாராட்டாது உழைத்து வந்தமையை நாம் நேரில் அறிவோம். மதுபான விஷயமாகவும் மதுப்பதுரியாரைக் கண்டித்தும் எத்தனையோ வியாசங்களை இவர் காலந்தோறும் எழுதி இப்பத்திரிகையில் வெளியிட்டமையைப் பலருமறிவர். இப்படியான ஒரு அபிமானியை அகாலத்தில் இழந்து அநுதாபமுறுதும் இவரது மனைவி மக்கள் சுற்றத்தார் முதலாகிய நேருடன் யாமும் உண்மையாக அநுதாபமுறுகின்றோம்.

சிவஞான போதம்.

(மூன்றும் பாகம்)

உண்மை, ஸ்ரீ வை. இராமாநாதன் அவர்களால் அநுவதிக்கப் பிரசுரஞ்செய்யப்பட்டது.

[40-ம் பக்கம், 32-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி]

சூத்திரம்—எ.

யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின் சத்தே அறியாது அசத்தில்லது அறியாது இருநிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா

நான்காம் பாடம்—உயிர் சத்து அசத்துக்களின் உதவியால் அறியும்.

உயிரின் அறிவு தானுய் அறியும் அறிவன்று, சிவம் உணர்த்தினால் மாத்திரம அறியும் அறிவென்று கண்டாம். சிவம், எல்லா உயிர்கட்கும உணர்த்தும். பெத்த உயிர்கட்கும உணர்த்தும்: முத்த உயிர்கட்கும் உணர்த்தும்.

ஆனால் பெத்த உயிர்களால் சிவம் அறியப்படுவதில்லை யாதலால், அவ்வுயிர்கட்குச் சிவம் வெளிப்பட்டு நின்று உணர்த்தாது. மறைந்துநின்றே யுணர்த்தும். முத்த உயிர்கட்கு அவ்வாறன்று. அவ்வுயிர்கள் சிவமேயாய் நின்று உணருமாதலால், அவைகட்கு உணர்த்தச் சிவமன்றி வேறு கருவிகள் உதவுவதில்லை. அவைகளின் அறிவு சிவம் ஒன்றாலேயே விளைக்கப்படும். அவற்றின் அறிவை விளக்கும் கருவி, சிவம் ஒன்றேயாம்; அஃதொன்றே முத்த உயிர்கட்கு வியஞ்சகம். எனவே முத்த உயிர் சிவமாகிய சத்தினுதவியாலறியும் என முடியும்.

இது நிற்க, பெத்த உயிர்க்கோ சிவம் மறைந்துநின்று உணர்த்துமென்றாம். இவ்வுயிர்க்கு வெளிப்படையாக நின்று உணர்த்த வேறு பொருளும் வேண்டப்படும். இவ்வாறு உணர்த்த அசத்தன்றி வேறில்லை. பெத்த உயிர்க்கு அமைக்கப்பட்டுள்ள கருவிகாணுதிகள் யாவும் அசத்துப் பொருள்களே; இவ்வசத்துப் பொருள்களின் உதவியைக்கொண்டே பெத்த உயிர் அறிகின்றது. கண்ணின் உதவியைக் கொண்டே காணும். இவ்வாறே மற்றைய கருவிகளைக்கொண்டே மற்றைய தொழில்களைச் செய்யும் இக்கருவிகள் யாவற்றையுந் தனக்குக் கீழடக்கி நிற்கும் யோக நிலையிலும், இவ்வுயிர் அவற்றின் வாசனையைக் கொண்டே யறியுமென்பது பெற்றாம் என்றால் பெத்த உயிர்கள் அசத்துப் பொருள்களின் உதவியால் அறியுமென்பது பெறப்படும். முத்த உயிர்கள் சத்தினுடைய உதவியா லறியுமென மேலே கண்டாம் எனவே உயிர்கள் சத்து அல்லது அசத்தின் உதவியாலேயே அறியுமென முடியும்.

இம்முடிபையே இச்சூத்திரம் "இருநிறனறிவுளது.....ஆன்மா" என்றுணர்த்திற்று. ஈண்டு "இருநிறனறிவுளது" என்னும் வாக்கியம் மூன்றாவேற்றுமைத் தொகையாக நின்று இருநிறன்களாகிய சத்து அசத்துக்களின் உதவியால் அறியும் அறிவினை யுடையது ஆன்மா; என்னும் பொருள் தந்ததை நோக்குக.

ஐந்தாம்பாடம்—உயிர் சத்தின்பால் நின்றும் அசத்தின்பால் நின்றும் அறியும்.

உயிர் சத்தினுதவியாற் சத்தினையும் அசத்தினுதவியால் அசத்தினையும் அறியுமெனபது பெற்றாம். அவ்வாறு அறியுமபோது எவ்வாறு நிற்குமென்பதை ஆராய்வாம்.

அசத்தினுதவியா லறியும்போது, உயிர் அவ்வசத்தோடு எவ்வாறு நிற்குமென்பது பிரத்தியட்சம்; கண்ணினாற் காணும்போது அக்கண்ணாகவும், காதினாற் கேட்கும்போது அக்காதாகவும். இப்படியே மற்றைய கருவிகளால் அறியும்போது அதுவதுவாகவும் நிற்கும். அன்றி, கருவியெனத் தானெனவேறு நிற்குமாறு உயிருக்கு இல்லை

இனி, சத்தினுதவியைக் கொண்டறியும்போது எவ்வாறு நிற்குமென்பதைச் சிந்திப்பாம் உயிர், சத்து, இரண்டும் அறிவாகாரப் பொருள்கள். இவற்றுள் உயிர் அறிவு, சத்தறிவினைக் கொண்டறியும்போது சத்தறிவாயே நிற்கும் என்பது பெற்றாம். என்றால், உயிர் நாளுக நின்றறிதலில்லை அசத்தினிடு அசத்தாய் நின்றும், சத்தோடு சத்தாய் நின்றும், அறியும். அதாவது எக்தக்காலத்து எதனை யறியுமோ அதனோடு அதுவாய் நின்று அறியுக் தன்மை உயிருக்கு உடையது. இதுதான் "சார்க்கதன்வண்ணமாக்தன்மை" எனப்படும். இத்தன்மையையே இச்சூத்திரம் "இருநிறனறிவுளது.....ஆன்மா" என்று உணர்த்தும். ஈண்டு "இருநிறனறிவுளது" என்னும் வாக்கியம், இருநிறனாகளாகிய சத்து, அசத்து இரண்டுகளுணர்வு நின்றறியும் அறிவையுடையது என்னும் பொருளை ஏழாம் வேற்றுமைத் தொகையாக நின்று தந்தது.

ஆறும்பாடம்—உயிர் சத்துமன்று அசத்துமன்று.

அசத்துப் பொருள்கள் யாவும் சடமென்றாம். உயிர் சித்தாதலின் அசத்தாக மாட்டாது இனி, உயிர் சத்தாகுமா வென்பதை ஆராய்வாம்.

உயிரும் அறிவுப்பொருள் சத்தும் அறிவுப்பொருள். என்றாலும் உயிரும் சத்தேயென்ன இடமில்லை இவ்விரண்டறிவுகளும் வெவ்வேறே: அன்றியும் சத்தென்றால் அறிவென்பதன்று. சத்தென்பது என்றும் ஒரு தன்மைத்தா யிருக்கும் பொருள். சிவத்தினறிவு என்றும் ஒரு தன்மைத்தாயுள்ளது. அவ்வறிவுக்குக் கூடுதல் குறைதலும விளங்குதல் மறைதலும், இல்லை உயிரின் அறிவு அவ்வாறன்று. ஒரு காலத்து அறியாமலே கிடக்கும், மற்றொருகாலத்து மறக்து மறக்து அறியும் இனியொரு காலத்துச் சத்தினுதவியால் ஒருதன்மையாகவறியும். ஆதலால் உயிர் சத்தாவதின்று. அசத்தாவதின்றென்றுணர்க்கண்டாம்

எனவே, உயிர் சத்துமன்று அசத்துமன்று என முடியும். இதுபற்றியே இச்சூத்திரம் "இரண்டலா ஆன்மா" என்றுணர்த்தும்.

என்றாலும் உயிர் ஒரு காலத்து அறியாது கிடத்தலால் அதனை ஒருவாறு அசத்து என்றும், மற்றொருகாலத்து உயிர், அறியுக்தன்மை பெறுதலால், ஒருவாறு சத்தென்றும் சொல்லலாம். இதனால் உயிர் சதசத்து என்று சொல்லப்படும்.

சூத்திரப் பொருட் சங்கிரகம்.

1. சிவம் அசத்தினை அறியாது.
2. அசத்துப்பொருள்கள் ஒன்றனையும் அறியா.
3. உயிர் சத்து அசத்துக்களாகிய இரண்டனையும் அறியும்.
4. உயிர் சத்து அசத்துக்களின் உதவியால் அறியும்.
5. உயிர் சத்தின்பால் நின்றும் அசத்தின்பால் நின்றும் அறியும்.
6. உயிர் சத்துமன்று அசத்துமன்று

காலம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்களாலும், பொருளியல்பு கூறி, பின் நிறுத்த முறைமையினால், ஏழாஞ் சூத்திரம் தொடங்கி மூன்று சூத்திரங்களினால் சாதனங்களின் இயல்பு கூறுவாராயினார் ஆசிரியர் பெருமான்.

மேற் கூறப்பட்ட மூன்று பொருள்களாகிய, பதி, பசு, பாசம் என்பனவற்றுள் சாதித்துப் பெறுதற்குரிய நிதுவென, பரிசேட அளவையினால் துணிந்துணர்தற்கு எழுந்தது இவ்வேழாஞ் சூத்திரமாகும்.

பரிசேட அளவையென்பது—ஒரு பொருளை, கியாயங்காட்டி இதுவல்ல இதுவல்ல வென்று நீக்கி, கியாயங் கொண்டு தள்ள முடியாது எஞ்சி நிற்கும் பொருளை இதுதான் என்று துணியும் அளவையாகும்.

வியஞ்சகம்—உடனின்று இன்றியமையாது உணர்த்தும் பொருள்.

ஏழாம் சூத்திரம் முற்றிற்று.

(தொடரும்.)

பொலிஸ்பகுதியாருக்கு உதவப்படுகின்றதென்பதை அவர்களே நன்கு சிந்தித்து, நீதியல்லாத வண்டியைப் பிடித்தல், தெருவீதியிலே சலலிமோசனஞ் செய்தவரைப் பிடித்தல் என்னுமிவைகளாதான் தங்கடமையென்று நினைத்துக்கொண்டு வாளாவிருத்தல் முடியாது பொலிசார் மிக்க திறமையோடு ஊரின் க்ஷேமத்தைக் குறித்து உழைத்துப் பெரும் புகழை யடைய முயல்வார்களாக

நல்லூர்க்கந்தசுவாமிகோயில் வழக்கு.

—:o:—

நல்லூர்க்கந்தசுவாமிகோயில்விஷயமான வியாச்சியம் சென்ற அக்டோபர்மீ 29-ம் 30-ந் தேதிகளில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்டிறிபியூனி மிஸ்டர் J. C. W. ரொ என்பவர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

வாதிகள் பக்கத்து நியாயவாதிகள் ஸ்ரீ A. V. குலசிங்கம், ஸ்ரீ M. S. இராசரத்தினம், பிறக்டர் ஸ்ரீ P. காசிப்பிள்ளை.

பிரதிவாதிகள்பக்கநியாயவாதிகள் ஸ்ரீ W. துரைசுவாமி, ஸ்ரீ ஸ்பென்ஸர் ராசரத்தினம், ஸ்ரீ P. வைத்தியலிங்கம், ஸ்ரீ A. S. வன்னியசிங்கியர், பிறக்டர் ஸ்ரீ R. R. கல்லையா, பிறக்டர் ஸ்ரீ S. குமாரசூரியர்.

மேற்படிகோயிற் பரிபாலனத்தின்பொருட்டு ஏதும் ஒழுங்குசெய்யவேண்டுமோ பிரதிவாதிகள் மேடிகோயிலைப் பரிபாலிப்பதற்குத் தகுந்தவர்களல்லரெனவும் கோயிற் பொருளைத் துர்விநியோகஞ் செய்கின்றார்களென்று வாதிகள் சாதிப்பது நிசந்தானோ என்பதுமே முறைப்பாடாகும்.

ஸ்ரீ. ச. தியாகராசக் குருக்கள் சொல்லிய சாட்சியம்.

நான் 25வருட காலமாக மேற்படி கோயில் அர்ச்சகராக விருந்தேன். பின்னர் சிலகாலம் அதை விட்டிருந்து அதன் பின் 7வருட காலமாக அங்குள்ள பிராமணர்களுக்கெல்லாம் மேற்பார்வைக்காரனாக விருந்தேன். 1921-ம்ஆண்டு மார்ஜ் மாதத்தில் சுகவீனமாயிருந்தபடியால் கோயிலுக்குப் போகவில்லை. அர்த்த காலத்திற்குள் மற்றைய பிராமணரும் பூசையிலிருந்து விலக்கப்பட்டனர். கோயில் எப்படிப் பரிபாலிக்கப்பட்டதென்பதைப்பற்றி நான் நல்லாய் அறிவேன். கோயில் வரவு செலவுக் கணக்குகளும் எனக்குத் தெரியும். வரவு 44510ரூபா செலவு 12000ரூபா. இதில் வந்த மிச்சம் 32510ரூபா வாகும். சுவாமிக்குச் சாத்தும் திருவாபரணங்களெல்லாம் எஜமான் வீட்டிற் கொண்டு போய் வைத்தெடுக்கப் படுகின்றன. இவைகள் முந்திக் கோயிலிலே வைத்தெடுக்கப்பட்டன. கோயிலுக்குரிய செல்லும் இப்பொழுது எஜமான் வீட்டில் வைக்கப்பட்டு வருகிறது. முன்னர் கோயிலிலேயே வைக்கப்பட்டு வந்தது. முதலாம் இரண்டாம் பிரதிவாதிக்குச் சொந்தமான ஆதனம் மிகச் சொற்பம். இரண்டாம் பிரதிவாதி தம்முடைய ஆதனத்தில் ஒரு பாகத்தைத் தன்னுடையமகளுக்குச் சீதனமாகக் கொடுத்ததுண்டு. கோயில் வரும்படியைக் கொண்டு வாங்கப்பட்ட 3000ரூபா பெறக் கூடிய ஒரு காணியும், பணமாக 5000ரூபாவும் இரண்டாம் பிரதிவாதியால் தன்னுடைய மகனாகிய பிறக்டர் சோமசுந்தரம் பெண்சாதிக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டன. 15000ரூபா மதிக்கக் கூடிய ஒரு புதுவீடும் பிரதிவாதியால் பிறக்டர் சோமசுந்தரத்திற்காகக் கட்டப்பட்டது. அதுவும் கோயிற் பணங்கொண்டுதான் கட்டப்பட்டது. மேலும் பிரதிவாதிகள் தங்கள் பழைய வீட்டைத் தவிர்த்து வீட்டு 30000ரூபா வரையிற் பெறக் கூடிய புதிய வீடு கட்டியிருக்கிறார்கள். இவைகளும் கோயிற் பணங் கொண்டுதான் கட்டப்பட்டன. ஆறுமுகமாப்பாணருடைய வீராகம் ஞாபகமாயிருக்கிறது. அதற்கு முந்தி அப்படிப்பட்ட டாம்பீகமான ஒருகல்யாணம் நடத்தினில்லை யென்று சொல்லலாம். சுப்பிரீம் கோர்ட் நீதிபதிகள், மாகாண எஜண்டர், உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் அந்த விவாகத்திற்கு அழைக்கப்பட்டார்கள். ஆங்கு வந்தவர்களை உபசரித்த செலவுமாத்திரம் 5000ரூபா வரையிலிருக்கும். இதுவுங் கோயிற் பணந்தான். பிறக்டர் சோமசுந்தரத்தினுடைய கல்யாணத்திற்கும், முதலாம் எதிரியின் கல்யாணத்திற்கும் தனித் தனி 1000ரூபா வரையிற் சென்றிருக்கும். ஆறுமுக மாப்பாணர் மூவாயிரம், நாலாயிரம் ரூபா வரையிற் பெறமதியான வைரம் வைத்த ஆபரணக்களைத் தம் மனைவியின் பொருட்டுச் செய்வித்திருக்கிறார். இவைகளெல்லாம் கோயிற்பொருள் கொண்டே செய்யப் பட்டன. முதலாம் பிரதிவாதி தம்முடைய தமயன் மனைவியை 15000ரூபாவுக்குச் சீதனாதிரத்துடனுண்டு. இந்தப் பணம் கப்பல் செய்விப்பதற்குச் செலவிட்டதாம். ஆனால் இவ் வழக்கைப் பின்பு முதலாம் பிரதிவாதி விட்டு விட்டனர். இந்தப் பணமும் கோயிற் பணமாகும். ஆறுமுகமாப்பாணர் கோயில் கட்டுவதற்காகக் கருங்கற்கள் வாங்கியிருந்தார். கருங்கற்கள் அகழ்ந்தெடுக்கக்கூடிய ஒரு நிலத்தைப் பலப்பிட்டியாலில் குத்தகையாக எடுத்திருந்தார். முதற்பிரதிவாதி கோயிலைக்கருங்கற் கொண்டு கட்டும் எண்ணத்தை விட்டுவிட்டார். இவர் 50000ரூபா வரையிற் செலவாகக்கூடிய ஒரு திருக்குளம் கட்டுவித்திருக்கிறார். இத்திருக்குளம் அவியமற்றதென நான் நினைக்கின்றேன். இந்த வழக்குத் தொடங்கிய பின்னர்த் தான் குளங் கட்டப்பட்டது. கோயில் ஆதனங்கள் சிலவற்றை இவர்கள் அலட்சியமாகப் பார்க்கிறார்கள். சிலர் ஒருஸ்தரிருவிழாவுக்கு முதற்கட்டியிருக்கிறார்கள். அந்தத் திருவிழாக்களை இவர்கள் இப்பொழுது நடத்துவதில்லை. முதற்பிரதிவாதி ஒரு கோயிலைப் பரிபாலித்தற்கான குணங்கள் இல்லாதவர்.

நீதிபதி:—ஒரு கோயில் எஜமானனாயிருப்பதற்கு வேண்டிய குணங்களெவை யெவை?

—(குருக்கள் வேண்டிய குணங்கள் சிலவற்றைச் சொல்லிப் பின்னருஞ்சொல்லுகின்றார்) முதற் பிரதிவாதிக்கு ஒரு வைப்பாட்டியுண்டு. இந்த வைப்பாட்டியை ஒழுங்கு செய்வதற்கு ஒரு மனுஷனுக்கு 1000 ரூபாவுக்கு சோட்டுக் கொடுத்தார். அந்தச் சோட்டுச் சித்தாரித்துப் பணம் அறவிடப்பட்டது. அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆண்குழந்தையுண்டு. அந்தப் பெண் இறந்த பிறகு அச்சுவேலியிலிருந்து இன்னுமொரு பெண்ணைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார். அந்தப் பெண்ணுக்கும் ஒரு ஆண்குழந்தையும் பெண்குழந்தையும் உண்டு. கோயிற் பொருளைக் கொண்டுதான் இவர்களுடைய செலவெல்லாம் நடத்துவது. இந்தக் கோயிலில் ஆடுவெட்டும் விஷயமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக காலவர் காலத்தில் பெரும் வாதங்களும் கண்டனங்களும் நிகழ்ந்தன. அமிர்தானந்த சுவாமியின் கேள்விப்படி ஒரு வருஷம் மாத்திரம் வெட்டப்படாமலிருந்தது. இந்தச் செயல் சாஸ்திரங்களுக்கு விரோதமானது. இது அறியாமையினாற் செய்யப்படுவது. தாசியர் நடனத்தைத் தவிர்த்தமையிலும்பார்க்க இதைத் தவிர்த்திருந்தால் உத்தமமாகும். இந்த வழக்குத்தை முதற்பிரதிவாதியே இரண்டாம் முறை தொடங்கியிருக்கிறார். யாழ்ப்பாணத்திலுள்ள தாசிகளெல்லாரும் பொதுப் பெண்கள். கோயிலில் முறை செய்யவேண்டியதே தாசிகளின் கடமை. இங்குள்ளார் பொதுமகளிராய் விட்டபடியால், படித்தவர்கள் இவர்கள் கோயிலில் நடனஞ் செய்யக்கூடாதெனத் தடுத்து விட்டார்கள். மாப்பாணர் குடும்பத்தில் யாருஞ் செத்தால் பிரேதத்தை மேற்படி கோயில் வாசலில் கொண்டுவந்து அதற்கு விபூதி பூசிப் பூவாலே மிடுவது வழக்கம். இப்படிச் செய்வது பெரிய பாவமாகும். ஒருபோதும் ஒரு பிரேதத்தைக் கோயிற்சந்நிதானத்திற்குக் கொண்டு போகக்கூடாது. அது பெருந் தவறாகும். ஆனால் இந்த எஜமானன் மற்றவர்களுடைய பிரேதங்களைக் கோயில் வீதியாலும் கொண்டு போக விடமாட்டார்.

ஸ்ரீ துரைசுவாமியின் குறுக்குக்கேள்விகட்கு விடை.

அங்குள்ள பிராமணரை மேற்பார்வை செய்வதும் மந்திரங்கள் சொல்லுவதுந்தான் எனது கடமை. பிராமணரைப் பூசையினின்றும் விலக்கியது 1922-ம் ஆண்டு ஏப்பிறல் மாதமாகும். இதற்கு மூன்று மாசங்களுக்கு முந்தி நான் கோயிலை விட்டு விட்டேன். குமாரசுவாமி ஐயர் சார்த்திகைத் திருவிழாவுக்கு முதல் கட்டியிருக்கிறார். ஆனால் இந்த முதலாளி அதைச் செய்விப்பதில்லை. அப்பொழுது இருந்த கோயிற் குருக்கள் ஒருவர் குறித்த உறுதியைக் காட்டி மெடி ஐயர் பேரால் கார்த்திகைத் திருவிழாவைச் செய்யவேண்டுமென்று முதலாளியை வற்புறுத்திக் கேட்டார். இப்படிப்பட்ட ஐயர் இருந்தால் சங்கடமென்றெண்ணி முதலாளி அவரைப் பூசையினின்று விலக்கிவிட்டார். ஆறுமுக மாப்பாணர் கோயில் விஷயங்களில் சிரத்தையும் கடவுட்பக்தியுமுள்ள ஒரு மனுஷன். 1892-ம் ஆண்டில் ஆறுமுக மாப்பாணர் கோயில் முதலாளியாக வந்தார். ஒரு கோயில் வரும்படியில் எஞ்சிய பொருளெல்லாம் வேதபாடசாலைகளை வைத்து நடத்துதற்கும் மற்றுந் தருமங்கட்குஞ் செலவிடப்படவேண்டும். முதலாளி டாம்பீகமாக நடக்க விரும்பினால் அதைத் தன் சொந்தப்பொருளைக் கொண்டு செய்வதல்லாமல் தருமப் பொருளைக் கொண்டு செய்யவொண்ணாது. அவர்களுடைய வீடு கட்டப்பட்ட வளவு 15000 ரூபாவுக்கு ஈடு என்பதும் வட்டியோடு 20000 ரூபாவாய் விட்டதென்பதும் எனக்குத் தெரியாது. நானறிகிறவரையில் முதற்பிரதிவாதி தன்பேரில் ஏதும் காணி வாங்கவில்லை. பூசைக்கிரமத்திலும் காலத்திலும் ஒரு தவறும் இல்லை. இந்த முதலாளி கோயிலில் மின்சார தீபங்களும் மூன்று நிரை எண்ணெய்த் தீபங்களும் அமைத்திருக்கிறார். கோயில் சுகாதாரத்துக்குத் தக்க விதமாகவும் சுத்தமாகவும் இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. முந்தியும் அப்படியே யிருந்தது. மூலஸ்தானத்தில் சுப்பிரமணியகுருக்கிலில்லை. வேலன் வைக்கப்பட்டிருக்கிறது. தாசிகளைக் கோயிலில் நடனஞ்செய்ய விடுவதினால் அங்கு வரும் வாலிபர் மனம் பழுதுபட்டுச் சிலகாலங்களில் காமதாந்தராய்விடுகின்றார்கள். தலஜாரோகணத்தினன்றும், தலஜ அவரோகணத்தினன்றும் தாசிகள் வேண்டுந்தான். திருவிழா விதிவரும்பொழுது வீதியில் எடுத்திற்குளினால் தாசிகள் நர்த்தனஞ்செய்யவேண்டிய விதியிருக்கின்றது உண்மையே. அதனைச் செய்யவேண்டியவர்கள் உருத்திர கணிகையர். அவர்கள் தங்கள் தலையை முண்டிதஞ்செய்து விபூதி உருத்திராக்ஷம் அணிந்திருத்தல் வேண்டும்.

ஸ்ரீ. த. கைலாசபிள்ளையின் சாட்சியம்.

நான் இந்துசாதனப் பத்திராதிபராய் முந்தியிருந்தேன். சைவபரிபாலனசபையைத்தொடங்கியவருள் நானும் ஒருவன். அச்சபை 1888-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. சைவசமயத்தை விருத்திசெய்தலும் வைகாலயங்களைக் கிரமமாக நடைபெறச் செய்வதுமே சைவபரிபாலனசபையின் நோக்கம். கந்தசாமி கோயில் விஷயத்திற்கும் நான் அதிக சிரத்தை கொண்டு அதைக் குறித்துப் பல விஷயங்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டேன். இப்பொழுதிருக்கிற கோயிற்கட்டடம் சாஸ்திரசம்மதத்திற்குமாறாகவிருத்தலினால் இதனைத்தவிர்த்துச் சாஸ்திரோக்தமாக ஒரு ஆலயம்அமைக்கவேண்டுமென்று பலமுறை எழுதியுள்ளேன். சைவாலயங்களில் ஆடுகோழி வெட்டுவதற்கு மாறாக நான் பலமுறையும்எழுதியுள்ளேன். ஆடுகோழி வெட்டுவது எங்கள் சமயக்கொள்கைக்கு விரோதமான செயல். சைவாலயங்களுக்குத் தாசியர் வேண்டுவதில்லை. கோயில் முதலாளி என்றிருப்பவர் தனது குடும்பத்தின் அன்னவஸ்திரச் செலவிற்கும் மருந்துச்செலவிற்குமல்லாமல் வேறெந்தச் செலவிற்கும் கோயிற் பொருளை யெடுக்கக்கூடாது. இதற்குப் பிரமாணம் பல சாஸ்திரங்களில் எடுத்துக் காட்ட முடியும். (இப்படிச் சொல்லி உபதேசகாண்டம் முதலிய நூல்களையும் எடுத்துக் காட்டினார்) இப்படியான ஒரு ஆலயத்தைப் பரிபாலிக்கவேண்டியவரிலுள்ள தக்கவர்கள் சிலரைத் தெரிந்து ஒரு சபையாக நியமித்து அவர்கள் மூலமாக நடத்துதலே முறையாகும். மேற்படி கோயிலிற் செய்யப்படும்கருமங்களுள் எனக்கு மிகவெறுப்பானது கோயில் அர்ச்சனைக் காசைக் குத்தகையாக விற்பதேயாகும். கோயிலைக் கடை போல மதித்து நடத்தலொன்னாது.

மேற்படி வழக்கின் எஞ்சிய விசாரணை இன்றைக்கு நடைபெறும்.

சூரிய கிரகணம்.

—:o:—

நிகழும் விபவஞு ஐப்பசிமீ உஅஉ (1928-ம் ஆண்டு நவம்பர்மீ 12உ) திங்கட்கிழமை பகல் விச்சாக நக்ஷத்திரத்தில் கேதுக்கிரஸ்த பார்சுவ சூரிய கிரகணம் சம்பவிக்கும். இது இலங்கையிலும் இந்தியாவிலும் முத்தாஸ்தமனமாகவும், பர்மாவில் கிரஸ்தாஸ்தமனமாகவுந் தோற்றும். மலேயாவில் கிரகணமில்லை. இதன் பர்சகாலாதிகள் வருமாறு:—

| | | |

மானிட தேகம்.

தொடக்கத்திலேயே டாக்குத்தரின் யோசனையைக் கேட்டு நடத்தலால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி கண்டனரிற்று கொண்டோம். இடையிடையே ஒரு டாக்குத்தர் எங்கோ சொற்றுப்பார்த்துக் கொள்வது மிகவும் நன்மையைத் தரும். உனக்குத் தெரியாமலே உள்ளில் ஏதும் வியாதி தொட்டிருக்கும்.

சென்ற ஐரோப்பிய யுத்தம் நடந்தபொழுது டாக்குத்தரால் சோதிக்கப்பட்ட மனிதருள் நூற்றுக்கு 47 பிரமணேர் ஏதோ ஒருவிதமான அல்லக்கணக்கு முடை யவர்களாய்க் காணப்பட்டார்கள். நூற்றுக்கு 21 பேர் வீதம் தருமிபத்தலர்களாய்த் தள்ளப்பட்டார்கள். சோதிக்கப்பட்டவருக்குள் நூற்றுக்கு 22 பேரில் க்ஷயரோக வியாதி இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. க்ஷயரோகம் ஓர் கண்ணோய். க்ஷயரோக பீஜம் ஒருவனில் நெடுங்கால மாக இருத்தல் கூடும். அவனுக்கு அந்த வியாதி வீருப்பதாக வெளிநோற்றமில்லாமலிருக்கும். வேறுவிதமான வருத்தங்களினால் ஒருவனுடைய தேகமுடைந்தபின் அவனில் மறைந்து கிடந்த க்ஷயரோக வியாதி வெளியாகும். இப்படிப்பட்ட நிலைமை கடினமான ஜீவநோய். இன்புரு வென்சாகாய்ச்சல் முதலிய வருத்தங்கள் வந்தபின்தான் வரும். ஒருவனுடைய தேகம் வியாதியை எதிர்க்க முயலாமல் செட்டு சொந்து போகுந் தன்மை களைப்பற்றி முன் எழுதிய கடிதங்களில் சொல்லியிருக்கிறோம்.

உனக்குத் தேவையான பொழுதுதீ கொழுப்பிலிருக்கும் க்ஷயரோக வைத்தியசாலைக்குப் போனால் தேவையான புத்திமதி மருந்து முதலிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வாய். இந்த வைத்தியசாலையில் நடக்கும் ஒழுங்குகளைப்பற்றிச் சிறிது பின்னாற் சொல்லுகிறோம்.

இந்த முயற்சியின் பிரதான நோக்கமானது க்ஷயரோக வியாதியால் பீடிக்கப்பட்ட நோயாளிகளை சுகமாக்குதலேயாம். இவ்வியாதியின் உறைவிடங்களைத் தேடி அவைகளை யகற்றுவதுமேயாம். இதை புத்தபாஷையில் "பகையாளியின் தேசத்துக்குப்புகுந்து எதிர்த்துப் போராடவேண்டும்" இது நோக்கமாகக் கொழுப்பு, புறக்கோட்டையிலுள்ள க்ஷயரோக மருத்துச்சாலை முதல்முதல் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த இடந்தான் இந்தப் போராட்டத்திற்குத் தலைமை இடம் க்ஷயரோக நோயாளிகு மருந்து கொடுத்துச் செய்யவேண்டியவைகளைச் சொல்லிக் கொடுக்கிறதுமன்றி ரூமத்திலே யிருக்கும் க்ஷயரோக ஆசுபத்திரி நாட்பட்ட நோயுள்ளவர்களையும், சுகத்தானமிலிருக்கும் க்ஷயரோக ஆரோக்கிய சாலைக்கு மாற்றப்படக்கூடிய நிலையிலுள்ள நோயாளிகளையும் அனுப்புவதற்கு இவ்விடத்தில் தான் தெரிவதுண்டு இப்படிச் செய்தல் வறிய நோயாளிகளைக் கவனமாய்ப் பாராப்பது மாத்திரமல்ல நோயையும் பரப்பவிடாமல் பண்ணும் நோக்கமாம்.

சேறும் கொழும்பிலிருக்கும் நோயாளிகள் தங்கள் வீட்டு ஆரோக்கியத்தைப் பற்றி இந்த வைத்தியசாலை தலைமைக்காரர் மேற்பார்வை செய்து கொண்டும் அவைகளுக்குத் தேவையான புத்திமதியையும் உதவியையும் செய்து கொண்டும் வருகிறார்கள் அத்துடன் இந்த நோயின் கிழ்ச்சியோடு சம்பந்தப்பட்ட விவரங்கள் யாவும் தேடிச் சேர்த்துக்கொள்வதற்கான ஒழுங்குகளு மிவ்விடத்திலுண்டு.

இவ்வியாதியை அடியோடு களைந்தபோடும் நோக்கமாக இவ்வியாதியால் வருந்துஞ் சனங்களை மற்றவர்களிலிருந்து பிரித்து ரூமத்திலுள்ள ஆசுபத்திரியிலாவது அவர்களை வைத்துக் காப்பாற்றலாம் என்னவது நமக்கியமென்பதை இங்கே விளக்கப் படுத்தத் தேவையில்லை வியாதி முற்றின நோயாளி ஒரு வீட்டிலிருக்கு மற்றவர்களுடன் சஞ்சரிப்பதைக் கூடியவரையிலவர்களைத் தனியாக ஒரு இடத்தில் வைத்திருப்பது எவ்வளவு நன்மையைத் தருகிறதென்பது ஒவ்வொருவருக்கு தெரியும். அப்போது தான் இந்நோய் அடங்கக் காணப்படுவதை நாம் குறைகூக்கூடியதாகிறோம் ரூமத்துக்கு அனுப்ப வேண்டிய நோயாளிகளை வீட்டில் வைத்திருப்பது பெருந்தீங்கிற் கிடமாகும் ஆனபடியால் அப்படிப்பட்ட நோயாளிகளை அவ்விடத்திற்கனுப்பி வைப்பது சனங்கள் தான்கள் ஒவ்வொருவரும் தேச நன்மையைக் கருதிச் செய்யக்கூடிய ஓர் பேர் உதவியாம்.

க்ஷயரோகவியாதி அப்பவே தொடங்கினதும் மாற்றக்கூடியவும் நிலைமையிலுள்ள நோயாளிகள் சுகத்தானமிலிருக்கும் ஆரோக்கிய வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள் நோயைத் தடுத்தல் மாற்றுதல்நிறுதல் இவைகளானகாரியமாகிறதோவல்லவோ க்ஷயரோகவியாதியோ இல்லையோ வென்று சமுசயமுள்ள நோயாளிகளுக் சுகத்தானமிலுள்ள ஆரோக்கிய வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள்

கொழும்பிலிருக்கும் க்ஷயரோகவைத்தியசாலையிலும் ரூமத்திலிருக்கும் க்ஷயரோக ஆசுபத்திரியிலும், சுகத்தானமிலிருக்கும் ஆரோக்கிய வைத்தியசாலையிலும் நோயாளிகளுக்குச் செலவில்லாமல் வைத்தியம் இலவசமாய்ச் செய்யப்படும் சுகத்தானமிலிருக்கும் ஆரோக்கிய வைத்தியசாலையில் நடக்கும் நோய்களைப்பற்றி ஒரு சேர விசேஷமாகச் சொல்லவேண்டும் இவ்விடத்தில் வெளியே உலாவுவதால் உண்டாகும் நன்மைகளையுமிரண்டு அரற்றுத்தான வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளுக்கு செய்யப்படுகிறது நோயாளிகளுக்கு பொழுது வெளியில் உலாவுவதனால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி அதிக அறிவூட்டப்படுகின்றது. சரியான விதமாய்ச் சுவாசிக்கப் பழக்கப்படுகின்றது. ஒவ்வொரு நோயாளியாக நோய்மாரி வீட்டுக்குச் சென்றபின் வெளியில் உலாவுவதால் வரும் நன்மைகளைப் பற்றிக்கூறி சிகிதோர்களுக்குச் சொல்லவேண்டும். இப்படிச் செய்யும் வேலை நோயைத்தடைபண்ணவும் அல்லது மாற்றவுங்கூடியவோர் முக்கியமான காரியம். இந்த வைத்தியசாலையில் இன்னொரு முக்கியமான காரியமுண்டு. அதாவது நோயாளிகள் ஒவ்வொருவரும் கொஞ்சக்காலம் சென்றபின் ஏதேனும் ஒரு வேலையைப்படிப்படியாகச் செய்யத் தலைக்கிளம்பிவிடுகிறார்கள். இப்படிச் செய்வதினால் தாங்கள் நோயினாலடைந்த கஷ்டங்களைப் படிப்படியாக மாற்றிக் தேறுதல் அடைந்து கொள்ளுகிறார்கள் இவ் வேலைகள் இலை, கஞ்சல் கூடையிலேசான வேலை துவர் கம்பலத்தோட்ட வேலைகள் வரைகளும் படிப்படியாகப் போகின்றன. இம் முயற்சியால் ஒரு நோயாளி தன் நோய்தரை கவனாய்ச் செலவிடுகிறதுமல்லாமல் அவன் நோய்மாரி வீட்டுக்குப் போகும் பொழுது தன் கவனமான வேலையை மறபடியுஞ் செய்கிறதற்குத் தகுதியுள்ளவனுகின்றான்

மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு காரியமும் க்ஷயரோக வியாதியைத் தடை பண்ண ஏற்பட்ட நலைமைக்காரர் செய்யும் பெருமுயற்சிகளைக் காட்டுகிறது. ஆனால் க்ஷயரோகவியாதிய அடியோடு களையவேண்டுமானால் உன்னுடைய உதவியுந் தேவை.

சத்தியாக்கிரகம்.

ஓர்சம்பாஷணை.

II

அடுத்தநாள் கர்தையாவின் தாயாருக்குக் கடுமையான வருத்தமென்றும், கர்தையாவை அவசரம் வருக்கு வரும்படியாய் யாழ்பாணத்திலிருந்து ஒரு தந்தி கர்தையாவுக்குக் கிடைத்தது. ஆகையால் கர்தையா வருக்குச் சடுதியாய்ப் புறப்படவேண்டியிருந்தது. உத்தியோகத்தில் இருந்துகொண்டு சடுதியாய்ப் புறப்படவேதென்றால் இலகுவானகாரியமல்ல. கர்தன் தான் நினைத்த சேரம் சடுதியாய்ச் செம்பரம் போக முடியுமா? பிராமணனின் உத்தரவோடு தானே போகவேண்டும். கர்தையாவில் பறைக்குண மில்லை. இக்குறை கர்தையாவின் உத்தியோ(ச்கரத்தைக் "கிறீக்கக் கிறீச்"சென்று முரண்படுத்திக்கொண்டிருந்தது. வண்டி அச்சுக்குக் கொழுப்புப் போட்டால்தானே சகடம் சத்தம்போடாமல் சுழலும். அதுபோலப் பறையன் பிராமணனுக்குக்கீழே வயிறுவளர்க்க வேண்டுமானால், பறையன் பிராமணனைக் கண்டவுடன் தோளிலிருந்து சால்வையை யெடுத்துக் கொடுக்கைக்குள் வைக்கவேண்டும்; பதுக்கவேண்டும்; கையைக் கசக்கவேண்டும்; ஐயர் பேசும்பொழுது ஒருகையால் வாயையும் மற்றக்கையால் குதத்தையும் மூடவேண்டும்; எதிர்பேசாதிருக்கவேண்டும்; குறுவெயர்வை வெயர்க்கவேண்டும்; புத்தி தடுமாறவேண்டும் இப்படிப்பிழைக்குங்குணம் கர்தையாவுக்கில்லாதது பெரும் அதிஷ்டவீன மென்றதான் சொல்லவேண்டும். என் அதிஷ்டவீனமென்றால்—உத்தியோகத்தில் நிலைத்துத் தழைத்து வரவேண்டுமானால், துரைமாருடையசர்தோஷமும், நட்பும், பழக்கமும் துரைமாருக்கேற்ற தாளமும், மரியாதைகளமாய் வருவதெல்லா வற்றையும் பேணுவதற்குப் பெரும் சட்டைச் சாக்கும் ஒருவனுக்குவேண்டும். அப்படியிருந்து விட்டால் ஒருவன் துரையின் எச்சில் எல்லாவற்றையும் தின்று கொழுப்பதற்கு எந்தி உலகத்திலும் ஆட்சேபமில்லை. இப்படி ஒருவன் கொழுத்து விட்டால் எக்கும் மரியாதையுண்டு. பலரும் வருவார்கள்; போவார்கள்; கேஷேமத்தைப் பற்றி விசாரிப்பார்கள்; புன்சிரிப்புக்கொள்ளுவார்கள்; மடை போடுவார்கள்; கிழவுஞ்சிப் பதினோரு பேர்பிள்ளைகளோடிருந்தாலும் கலியாணம் பேசி எத்தனையோ பேர் வருவார்கள்; இன்னோரன்ன பல உபசாரங்களும் செய்வார்கள் தானே. இப்படியான மரியாதை செய்வதால் ஒருவனுக்கு"பண வரவேயொழியப் பணச் செலவில்லை"யே! பணச்செலவில்லாத மரியாதைகளைச் செய்து அதால் சுயமடையப் பொதுவான எவரும் பின் நில்லார்கள் தானே. இந்த வயிற்று வளர்ப்பை நினைந்து தான் போலும் கிழவியும்:—

"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி யிடத்துண்கை—கிச்சி
லயிற வளர்க்கைக்கு மானமழியா
துயிர்விடுகை சாலவுமும்"

என்ற பொன்போல் மொழிந்தாள்.

இப்படியான கிழ்ப்படியும் குணம் ஒருவனுக்கில்லாவிட்டால் கிழ்ப்படிவை வேண்டி நிற்கு மெவரும் கோபுகமாய் அடிக்க இயலாவிட்டாலும் பதுங்கி நின்றுகுதல் அடிக்கத் தருணம் பார்ப்பார்கள் தானே. கர்தையாவுக்கு விவேகமில்லாவிட்டால் எப்பேர் உத்தியோகத்தைக் கழற்றிக் கையிலே கொடுத்திருப்பார்கள். பாவம்! லீவுவேண்டும் என்று நிற்கும்பொழுது எச்சில் தின்று கொழுத்தவர்கள் இப்போது கொடுக்க முடியாது என்று சொல்வது; அல்லாது போனால் ஒருபகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மாற்றி விடுவது; அல்லது ஒரு மாதம் வரும் பொழுது நல்ல மலேரியா உள்ள இடத்துக்கு மாற்றி விடுவது; அல்லது சுகயீனமான இடத்திலிருந்தால் அந்த இடத்திலே இருந்து கடைசி மூச்சை விடச் செய்வது; அல்லது அந்தச் சுகயீனமான இடத்தில் இருக்கார் என்ற அடையாளம் அவர் உடம்பில் (பெண்சாதி பிள்ளைக்காளுமிருந்தால் அவர்கள் மெலிதல்) ஏல்லாம் அழுதும்படி அழுக்கிப் பிடித்த லாயிய இப்படிப்பட்ட வம்புகளெல்லாந் தான் செய்யப் பார்ப்பார்கள். இவைகளால் கர்தையாவைப் பயப்படுத்த முடியாது. ஆனால் கர்தையா அன்று தந்தியைக்கொண்டுபோய்க் காண்பித்தவுடன் துரையும் அவையத்தாரும் உடனே லீவுத் தொழுகு செய்தது கர்தையாவுக்குப் பெரும் அதிசயமாயிருந்தது. ஒருபொழுது நாய்க்கிழவியின் பூவையசியின் பெருபேறு யிருக்லாமென்றும் மனதுக்குள் நினைத்தான்.

கர்தையா துன்பத்துக்கிடம் கொடுப்பதே கிடையாது. ஆனால் தாயின் ஆபத்தான நிலை கர்தையாவை அறியாது துயருறச்செய்துவிட்டது. கர்தையாவின் இஷ்ட தெய்வம் தாய்தான். தாய்மாருக்குப் பிள்ளைகள் எப்படித் தான் நிரிகாண சுத்தியாய்க் கடமை செய்தாலும், தாய்மார் பிள்ளைகளுக்குச் செய்யுங் கடமைகளில் ஒரு அணுவளவுக்கும் பிள்ளைகளின் ஆற்றல் சமானமாயிராது. பிள்ளைகளின் ஆற்றல் இவ்வளவு பெறுமதியற்றதாய் ஆன்றோரால் மதிக்கப்பட்டிருக்க, இக்கு அரேகர் மாதச் சம்பளத்தில் இருபது அல்லது மூப்பது ரூபாயை மாதவீரம் வீட்டுச் செலவுக்கு அனுப்பிப்போட்டுத் தான்கள் பிராமாதாவுக்குச் செய்யவேண்டிய கடமை யெல்லாம் செய்துவருகிறோம் என்று பெருமை யடைந்துகொண் டிருக்கிறார்களே. எல்லவல வெட்கமான காரியம். மாதச் சம்பளம் வடுக்கும் ஒருவன் தன் தாய் தகப்பனின் செலவுக்குத் தன் சம்பளத்தில் ஒருபாகத்தை அனுப்புவது பெரும் வீரமான செயலா? அல்லது சர்தோஷப்படக்கூடிய ஒருசெய்கையா? எந்த மூடனும் செய்யக்கூடிய வயிற்று வளர்ப்புக் காரியதானே. அல்லது ஒருவன் உழைத்துழைத்துத் தன் சகோதரிமாரின் ஸ்ரீதனத்துக்காய்க் கொடுப்பது பெரும் பட்டையமா? ஒருவன் பிதாமாதாவின் தெய்வீகத்தன்மையை உணரவேண்டும்; உணர்ந்து அவர்கள் முன்னாகிரியாய் நடந்த காரியங்களைப்பற்றி இறுதி வரைக்கும் பிடித்து ஒழுகவேண்டும்; முன்னவர்கள் தெரிந்து(தெரியாது கோடிஞல்)அதைச் சீர்ப்படுத்த வேண்டும்; பார்த்தவர்கள் "ஐயர் ஆடையை தவப் பேரே" என்று சர்தோஷப் படவேண்டும்; குடிக்குப் பிறந்து குரங்காட்டம் ஆடக்கூடாது; குடியைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாய் இருக்கக் கூடாது; இப்படியான செய்கைகள் தான் பிதா மாதாவையும், நாட்டாரையும், கடவுளையும் பிரிப்பிடத்துவன. அடுத்த சரும்பு அவர்கள் சோயுற்ற காலத்தில் அல்லது அந்திய காலத்தில் அவர்களைத் தாங்களே பரிகரித்தல் (Or Nursing) வேண்டும் என்பதுதான் கர்தையாவின் கொள்கை. ஆகையால் "தாயார் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறாரே. இப்படியான நிலையில் அல்லவாகான் என் கடமையைச் செய்யவேண்டும். கடவுளே! இப்படியான நிலையையில் என தாயாருக்குக் கடமை செய்யும் பாக்கியத்தை நான் பெறவில்லையா? உயிருடன் இருக்கும்பொழுதல்லவா போய்ப் பார்க்கவேண்டும்; கடமை ஆற்றவேண்டும்; செத்தபின் என் கொட்டை அங்கே என்னத்துக்கு? நான் தாயார் செத்த பின் செய்யும் கடமைதான் என்ன? ஒன்றுமில்லை. ஆகையால் கடவுளே! என் அன்பான அன்னையை உயிருடன் காணுஞ் சலாக்கியத்தை மாத்திரம் எனக்குத் தாருளும்; பின் உமக்குச் சித்தமாயிருந்தால் என் தாயாரை நீர் எடுத்துக்கொள்ளும்" என்று கடவுளை மனம் நொந்து வேண்டிக்கொண்டார். அன்று சாயங்காலம் கர்தையாவைக் காண்பதற்காகச் சமாசாரத்தை அறிந்த சுணயர் அரேகர் வந்திருந்தார்கள். இவர்கள் கர்தையாவுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சின்னத் துரை வந்தார். சின்னத்துரையைக்கண்டதும் கர்தையாவுக்குத் தக்கம் மேலிட்டது. கர்தையாவைச் சின்னத்துரை தேற்றி "ஒருவன் உண்மையாய் வேண்டினால் அவ்வேண்டுதல் ஒருபொழுதும் கடவுளால் மறுக்கப்படமாட்டாது. நீர் விரும்பினபடி எல்லாம் கடவுளின் செயலால் ஒப்பேறும். அதற்கு அறிகுறியாய் நாளைக்கு உமக்கென்று ஒருகடிதம் சர்தித்திருக்கிறது" என்று கப்பல் பிரயாணச் சீட்டைக் கர்தையாவிடம் கொடுத்தார். கர்தையாவுக்குப் பிரயாணச்சீட்டைப் பார்த்தவுடன் நம்பிக்கையுண்டாய்விட்டது. இராமேயிலால் கோலாலம்பூரைவிட்டு அடுத்த நாட் காலை பினங் போய்ச் சேர்ந்தார். பினங் போய்ச் சேர்ந்த அன்று சாயங்தரமே 'அச்சுதமாது' என்னும் ஜப்பானிய கப்பலில் கொழும்புக்குப் புறப்பட்டார். (தொடரும்.)

மலாய்நாட்டு வாசி.

அடைவுகை விற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்க சட்டனைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திருகோணமலை 7-ம் நெம்பர் சின்னக்கடைவீதி பெரியதம்பி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த வெளிதில் விற்கப்படவேண்டிய சரக்கைளின் விபரம்:—

				1926-ம் ஆ. 6-ம் மா
இ.	வ.	ரூ.	சா.	
1514	1	10	04	முழுப்பவுண் 1
1547	17	9	50	பவுண்பின்னைச்சப்பு சோ 1
1580	30	50		5 பட்டிலைசால 1
				7-ம் மா
1652	29	10	04	அஞ்சோட்டு வளையல் 8
1656	31	16		பொன் சாப்பு 1
				8-ம் மா
1698	17	7		கொப்புச்சிறிங்கி கூட்டம் 1
1711	25	12		வெ அடுக்குச்சாப்பு [கூட்டம் 1
				9-ம் மா
1756	22	35		பவுண் பின்னைச்சாப்பு கூட் [டம் 1
				10-ம் மா
1800	25	5	02	வெ சாறணை கூட்டம் 1
1823	30	10		கலாவரை மோதிரம் 1
1825	31	6		மெலிதி கூட்டம் 1
				11-ம் மா
1866	16	35		டிம்மியுடன் ஒலிச்சறடி 1
1879	25	17		வெ. பாதரசம் கூட்டம் 1
1884	28	10		முழுத்தங்கப்பவுண் 1
				12-ம் மா
1899	6	12		திருகுபு 1
1938	23	10	04	முழுத தங்கப்பவுண் 1
1940	23	35		சவடிமுகப்பு 1, மணி 4, வெருமுல்காப்பு கூட்டம் 1
1942	24	80		பூர்காப்பு கூட்டம் 1
				1927-ம் ஆ. 1-ம் மா
1964	4	20		சிங்கமுகப் பின்சோர்க்கி 1
1986	10	15		பின்சோர்க்கியுடன் கரிச மணிக்கோர்வை 1
1998	13	11		முழுப்பவுண் 1
2011	17	8		வெ சாறணை கூட்டம் 1
2026	20	10		பின்சோர்க்கியுடன் உட் [கட்டு 1
				2-ம் மா
2074	16	15		பின்சோர்க்கியுடன் கரிச மணிக் கோர்வை 1 (பதக்கமுடன்)
2095	26	55		மெழுகுடன் முகப்புக்குக் கல்வைத்த சிங்கமுகக் காப்பு கூட்டம் 1
2106	5	80		பின்சோர்க்கியுடன் பெரிய மணிக்கோர்வை 1
				4-ம் மா
2146	5	85		பூரானட்டியல் 1 சிறு திருகுபூ 1 அழுக்காமையோட்டுவளையல் 6 வெ சாறணை கூட்டம் 1 பின்சோர்க்கியுடன் கரிசமணிக்கோர்வை 1
2156	11	18		சம்புராதவளையல் ஒற்றை
2169	20	14		பின்னை பவுண்காப்பு ஒற்றை
2176	25	23		இமிற்றேசன் கல்வைத்த பவுண் வைச்சங்கிலி 1
				5-ம் மா
2204	10	110		டிம்மியுடன்பூரானட்டியல் 1 மெழுகுடன் கொவிகக் காப்புசோடி 1
2207	11	10	04	பொன் கைவிலங்கு 1
				6-ம் மா
2268	8	11		பின்னைப்பவுண்காப்பு 1
2274	12	35		பதக்கமுடன் பொன்பூரானட்டியல் 1
2288	16	20		சிறுபட்டணக்காப்பு 1
2304	21	6		கம்பியுடன் பொன்தோடு சோடி 1
2311	23	6		வெ குழந்தைக்காப்புக் கூட்டம் 1
2325	28	30		பதக்கமுடன் கரிசமணிக் கோர்வை 1
				7-ம் மா
2356	11	20		முழுத்தங்கப்பவுண் 2
2371	14	8		வெண்மட்டமணிக்கோவை 1
2385	23	25	04	பவுண்பின்னைக்காப்புக் கூட்டம் 1
2388	24	6		இமிற்றேசன் கல்வைத்த விலங்கேக்கன் கூட்டம் 1
2394	26	10		குவளை முத்துக்கேக்கன் சோடி 1
2406	20	6		வெ சாறணை கூட்டம் 1 வெ சங்கிலி கூட்டம் 1
				8-ம் மா
2412	1	40		பூரானட்டியல் 1
2446	18	35		முழுத்தங்கப்பவுண் 3
2452	27	20		சிங்கமுகப் பின்சோர்க்கியுடன் தாலிச்சொடி 1
2465	28	5	02	3 துல்மணியட்டியல் 1
2470	30	15		கைவிலங்கு 1 க. இ
				9-ம் மா
2498	14	6		கம்பிப்பூரான் தோடு கூட்டம் 1
2508	21	60		கெட்டிப் பட்டக்காப்பு ஒற்றை
2518	29	75		1 பட்டிலைசால 1 பின்சோர்க்கியுடன் கரிசமணிக் கோர்வை 1 க்குபவுண் 2
				10-ம் மா
2532	8	45		மெழுகுடன் பட்டக்காப்பு கூட்டம் 1
2535	12	35		சவடிமுகப்புடன் சோடி 1
2548	17	52		சம்புராதவளைய 2
2556	23	10		குவளைக்கேக்கன் சோடி 1
2558	„	8		திருகுபு 1
				11-ம் மா
2583	4	22		இமிற்றேசன் ஓப்பின்தோடு கூட்டம் 1
2585	5	55		பொன் கரிச 1 க்கு மணி 3
2587	6	10	04	குடித்தன் மோதிரம் 1

விற்பனவு:—விபவஞ வார்த்திகை மீ 6-ந் திகதிக்குச் சரியான (21—11—28) புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் ஏறபட்டாலை பிறகில்லாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த வெளிதில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
வெந்தெமேன்தர்.

(Mis. 1332) 29—10—28.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்கொளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambanchan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.